என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எனினும் பயன்படுத்த வில்லை என்று தெரிகிறது. ஆகவே ரயில்வே செஸ் பண்டை பஞ்சாயத்து யூனியன் சிறிய கட்டிடங்கள் கட்டுவதற்கு கட்டாயமாக பயன்படுத்திக்கொள்ளலாமென்று ஒரு உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் என்னிடத்தில் இல்லை. இதற்கு தனியாகக் கேள்வி போடவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : சாலை மானியம் கொடுக்கிற நேரத்திலே தலைக்கு 40 ந.பை. என்ற விகிதத்தில் கொடுக்கிறார்கள். சில பஞ்சாயத்து யூனியன்களின் எல்லை பரந்திருக்கிறது. ஆகவே மக்கள் தொகையை கணக்கிடாமல், ரோடுகளின் நீளத்தை மனதில் வைத்து, அதற்கேற்றவாறு மானியம் கொடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நீளத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மானியம் கொடுப்பது முடியாத காரியம். எல்லை பரந்திருக்கிறது என்பதற்காக ரோடுகள் போடாமல் இருப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன்களிலே அதிகமான ரோடுகள் போடுகிறார்கள். சர்க்கார் இதைப்பற்றி தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நன்றாக சிந்தித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

பரம்பிக்குளம் மின்சார திட்டம்

*468. **கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் மின்சாரத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது ?

(இ) இத்திட்டத்தினால் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின்சாரத் திட்டத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது இத் திட்டத்துக்காக உத்தேசச் செலவு 10 கோடியே 22 லட்சமாகும்.

(இ) 180 மெகாவாட்.

சென்னை நகரில் டாக்சிகள்

*469 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மொத்தமாக டாக்சிகள் ஓட்டும் லைசென்ஸ் எத்தனை கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அந்தக் கம்பெனிகளில் ஆனமலை பஸ் டிரான்ஸ்போர்ட் கம்பெனியும் ஒன்று ?

(உ) அதற்கு சர்க்கார் கோட்டாவிலிருந்து ஐந்து அம்பாசிடர் கார்கள் ஒதுக்கப்பட்டது உண்மையா ?